# சங்க இலக்கியத்தில் முருகன்

ந. கந்தசாமி.

பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் சங்க இலக்கியங்கள் ஆகும். இக்கருத்தினைப் பெரும்பாலான அறிஞர்கள் ஏற்றுக் கொள்கின்றனர். இவ்விலக்கியங்களின் காலம் கி. மு. 300 -கி. பி. 300 என்று எண்ணப் பெறுகிறது (1). இவ்விலக்கியங்கள் பெரும்பாலும் தொல்காப்பியர் வரையறுத்துள்ள அகம்-புறம் என்ற திணைக்கோட்பாட்டினை மேல்வரிச் சட்டமாகக் கொண்டு சங்கப் புலவர்களால் பாடப் பெற்றுள்ளன. பத்துப்பாட்டினுள் ஒன்றான திருமுருகாற்றுப்படை முழுமையும் பக்தி இலக்கியமாகத் திகழ்கிறது. திருமுருகாற்றுப்படையினை இந்தியாவின் முதல் பக்தி இலக்கியமென்று இந்திய இயல் பேரறிஞர் டாக்டர் ஏ. எல். பேஷம் சுட்டியுள்ளார் (2). இவ்வாறே எட்டுத்தொகை நூலான பரிபாடலும் பல திருமால், செவ்வேள் பாடல்களைக் கொண்டு பக்தி இலக்கியமாகத் திகழ்கிறது.

திருமுருகாற்றுப்படை, பரிபாடல் ஆகிய இரு நூல்களைத் தவிர்த்து, ஏனைய சங்க இலக்கியங்களில் பொதிந்துள்ள பக்திக் கூறுகளில் முருகனைப் பற்றிய குறிப்புக்களை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். அரசர்களையும், குறுநில மன்னர்களையும், திணை மக்களையும் அவர்தம் ஒழுகலாறுகளையும் பாடுபொருளாகக் கொண்ட இந்த மேற்கணக்கு நூல்களில் பக்திக்கும் இடமுண்டோ என்று சிலர் எண்ணலாம். பண்டைத் தமிழ் மக்கள் அகம் புறம் ஆகிய இருவகை வாழ்வினையும் இறைவனை நினைந்தே மேற்கொண்டனர் என்பது இவ்விலக்கியங்கள் உணர்த்தும் உண்மையாகும் (3). எனவே, அவர்கள் வணங்கி, வளமும் வாழ்வும் பெறுதற்கு உற்ற துணையாய் ஒளிர்ந்த தெய்வங்களையும் அத்தெய்வங்களை அடிப்படையாகக் கொண்டு எழுந்த அருஞ்செயல்கள், விழாக்கள், வழிபாடுகள் முதலியவற்றையும் இச்சங்க இலக்கியங்கள் சுட்டிச் சென்றுள்ளன.

சங்க இலக்கியங்கள் திருமுறைகளைப் போல பக்தி இலக்கியங்கள் அல்ல. ஆனாலும், சங்க கால மக்களிடத்தில் தீவிரமான தெய்வ பக்தி விளங்கியது. இறைவனைப் பலவகைப் பெயர்களினாலும் பண்புகளாலும் பாடிப் பரவித் தெளிவு பெற்றனர். ஆதலின், சங்க இலக்கியங்களில் பக்திக்குரிய வித்துக்கள் அல்லது கூறுகள் படிந்திருத்தல் இயல்பே. இவைதாம் திருமுருகாற்றுப்படை, பரிபாடல் ஆகிய இலக்கியங்களில் நன்றாக மலர்ந்தும் பல்லவர் காலத்தில் எழுந்த பக்திப் பனுவல்களில் கனிந்தும் பரிணமம் உற்றன.

தமிழ் மக்கள் மிகவும் தொன்மையான காலத்திலிருந்தே முருகனை வணங்கி வழிபட்டு வந்துள்ளனர் (4). இதன் காரணமாகவே சங்க இலக்கிய காலத்தில் உருப்பெற்ற மிகப் பழைய பாடல்களில் முருகனைப் பற்றிய குறிப்புகள் மிகுதியாகக் காணப்படுகின்றன. இவற்றைத் தொகுத்து, ஆராய்ந்து நோக்குங்கால் முருகனைப் பற்றிய பக்தித் திறம், மக்களின் மனத்தில் மலர்ந்திருந்த பாங்கு புலப்படும்.

## 1. முருகனைப் பற்றிய பெயர்கள்

முருகன் தமிழ்த் தெய்வம். முதன் முதலில் மனித குலம் மலை நிலத்தில்தான் வாழ்ந்தது என்றும், பிறகுதான் ஏனைய நிலங்களை நோக்கிச் சென்றது என்றும் அறிஞர் கூறுவர். முதல் நிலமாகிய குறிஞ்சியில் வாழ்ந்த மக்கள் வழிபட்ட கடவுள் முருகனே ஆகும். முருகு என்ற தனித் தமிழ்ச் சொல் மாறா இளமை, அழியா அழகு, தெய்வத் தன்மை, மணம் முதலிய பல பொருள்களில் வழங்கும் (5). இவ்வியல்புகள் அனைத்தும் உடைய பரம்பொருளை முருகன் என்ற இனிய சொல்லினால் பண்டைத் தமிழர் பரவிப் பணிந்தனர். சங்க இலக்கியங்களில் முருகு, முருகன் என்ற சொற்களால் இறைவன் சுட்டப் பெறுதலைப் பின்வரும் குறிப்புகளால் அறியலாம்: முருகு அயர்ந்து (6), முருகென மொழியுமாயின் (7), முருகென

மொழியும் (8), முருகமர் மாமலை (9), முருகன் பொதினி (10), முருகு முரண் (11), இயன்முரு கொப்பினை (12), முருகுமனைத் தரீஇ (13), முருகுறழ் முன்பொடு (14), முருகென வேலன் (15), முருகற் சீற்றத்து (16), முருகொத் தீயே (17), முருகன் கோட்டத்து (18), முருகுடன்று (19), முருகுறழ (20), முருகியன் (21), முருகு (22), முருகுபுணர்ந்து (23). இங்ஙனம் பெருவழக்காக 'முருகு' காணப்பெறுதலின், முருகன் என்ற பெயரின் தொன்மை உய்த்துணரப்படும்.

**சேஎய்**

முருகனைச் சேய் என்ற சொல்லினாலும் பழந்தமிழர் சுட்டியுள்ளனர். தொல்காப்பியத்திலும், *"சேயோன் மேய மைவரை உலகமும்'* என்று குறிக்கப் பெற்றுள்ளது (24). சேய் என்ற சொல்லிற்குச் சிவந்த திருமேனி உடையவன், மைந்தன் என இருவகைப் பொருள்கள் உண்டு. முருகனைச் செம்மேனி எம்மானாகக் கருதியதால் சேய் என்ற பெயர் செம்மை என்ற சொல்லின் அடியாகத் தோன்றியது எனலாம். சிவபிரானுக்கு மைந்தன் என்ற கருத்திலும் இச்சொல் வழங்குதல் உண்டு. சங்க நூல்களில் பின்வரும் பாடல் பகுதிகளில் சேய் என்ற சொல் முருகனைக் குறிக்கின்றது: சேஎய் (25), சேய்மலைநாடன்(26), பைம்பூட் சேஎய் (27), சுடர்பூட் சேஎய்(28). முருகனைக் குறிக்கும் 'சேய்' என்ற சொல்லினால் வேந்தர்களும் குறிக்கப்படுதலை சங்க இலக்கியத்தில் காணலாம் (29).

**வேள்**

வேள் என்ற சொல்லினாலும் சங்க காலத்துப் புலவர்கள் முருகனைக் குறித்துள்ளனர். வேள் என்ற சொல்லிற்கு விருப்பம் என்ற பொருளும் உண்டு. பக்தர்களால் விரும்பப்படுபவன், பக்தர்களை விரும்புகிறவன் என்ற வகையில் வேள் என்ற சொல் முருகனைச் சுட்டியுள்ளது. இச்சொல்லுடன் செம்மை, நெடுமை, விறல் முதலிய அடைமொழிகள் சேர்ந்து முறையே செவ்வேள், நெடுவேள், விறல்வேள் என்ற இனிய சொற்களினால் முருகன் மொழியப் பெற்றுள்ளான்: செவ்வேள் (30), நெடுவேள் (31), விறல்வேள் (32). மலைநிலத்துப் பகுதிகளை ஆண்ட அரசியல் தலைவர்களை வேளிர் என்ற சொல்லினால் பண்டைத் தமிழர் சுட்டினர். முதலில் வேள் என்ற சொல் முருகனைக் குறித்து, பின்னர் அவனை வழிபட்டு அம்மலை நிலத்தை ஆண்ட தலைவர்களையும் சுட்டியிருத்தல் வேண்டும்.

**மலைக்கடவுள்**

குறிஞ்சி நிலத்திற்குச் சிறப்புரிமை பற்றி முருகனை மலைநிலத்துக் கடவுளாகக் கூறும் மரபு மிகவும் பழமை வாய்ந்தது. குன்றக் குறவன் (33), குன்ற நாடன் (34), சூர்மலை நாடன் (35), மலை நாடன் (36), மலையுறை கடவுள் (37), வரையுறை தெய்வம் (38), முதலிய பல்வேறு தொடர்களினால் முருகனைச் சங்க நூல்கள் சுட்டுகின்றன.

**வேலன்**

முருகனுக்குச் சிறப்பான படைக்கருவியாக வேல் சுட்டப் பெறுகிறது. பெரும்பாலும் ஒவ்வொரு தெய்வத்திற்கும் படைக்கருவி கூறும் மரபு சங்க இலக்கியத்தில் காணப்படுகிறது. மெய்ப்பொருள் இயலார், ஞானத்தைத் தான் பண்டையோர் கூரிய வேல் முதலிய கருவியாக உருவகித்துக் கூறியுள்ளனர் என்றும், பிறவிக்கு ஏதுவாக உள்ள அறியாமையை அழிக்கும் ஞானக் கருவியாக இதனைக் கருதுதல் வேண்டும் என்றும் விளம்புவர். எல்லாக் கருவிகளையும்விட வேல் சிறந்து விளங்குகின்றது. வேலாயுதத்திற்கு மேலாயுதம் இல்லை என்பது பழமொழி. வெல் என்ற சொல்லின் அடியாகத் தோன்றிய வேல் வெற்றியின் அடையாளமாக விளங்குகின்றது. இறைவனை உணர்ந்து ஒன்றுதற்கு ஒட்டாது உயிர்க்குத் தடையாக உள்ள ஆணவம், கன்மம், மாயை என்ற பகைவர்களை ஞானமான வேலினால் அழித்து உயிர் உய்திபெற அருள் பாலிக்கும் சிறப்பினால் முருகனை வேலன் (39), வேல்வல்லான் (40), வென்வேலான் (41) என்ற சொற்களினாலும் சங்கப் புலவர்கள் சுட்டியுள்ளனர்.

### ஆலமர் செல்வன் மகன்

முருகனைக் குறிக்கும் பெயர்களில் ஆலமர் செல்வன் என்பதும் ஒன்று. முழுமுதற் கடவுளாகிய சிவபெருமான் ஆலமரத்தின் அடியில் தென்முகக் கடவுளாக அமர்ந்து முனிவர் நால்வர்க்கு மெய்ப்பொருள் புகட்டியதாகப் பழைய நூல்களில் காண்கின்றோம். இதனால் சிவபிரானுக்கு ஆலமர் செல்வன் என்ற பெயர் வழங்குவதாயிற்று. இவ்விறைவனின் புதல்வன் முருகன் என்ற கருத்தில் மருதனிள நாகனார், *'ஆலமர் செல்வன் அணிசால் பெருவிறல்'* (42) என்று பாடிப் பரவியுள்ளார்.

### அணங்கு, இறை, கடவுள்

முருகன் தீயோரை வருத்துவதால் அணங்கு (43) என்ற பெயரினாலும் சுட்டப் பெறுகிறான். பரம்பொருளுக்கு உரிய 'எங்கும் தங்கியிருத்தல்', 'எங்கும் கடந்திருத்தல்' என்ற இருவகை இயல்புகளையும் குறிக்கும் தமிழ்ச் சொற்களான முறையே இறை, கடவுள் என்பன விளங்குகின்றன. இவ்விரண்டு குறியீடுகளினாலும் முருகப் பெருமானைச் சங்க நூல்கள் சுட்டுதல் காணலாம் : இறை (44), கடவுள் (45).

### நெடியோன்

இயல்பாகத் தனக்கெனத் தனி வடிவம் இல்லாத அருவப் பொருளாகிய இறைவன் உயிர்களின் பொருட்டுக் கொள்ளும் அருள் வடிவங்கள் பலப்பல. வானுற ஓங்கி நீண்டு நிற்கும் நெடிய உருவத் திருமேனி முருகனுக்கும் உரியதாதல் பற்றி நெடியோன் (46), நெடுந்தகை (47) என்ற சொற்களினாலும் அக்காலத்துச் சான்றோர் முருகனைக் குறித்தனர்.

### ஐயன்

ஐ என்ற தமிழ் உரிச்சொல் வியப்பு, தலைமை முதலிய பொருளைத் தரும். வியந்து பாராட்டத்தக்க தலைமைப் பண்பு உடையவனை ஐயன் என்று அழைத்தல் மரபு. முருகன் எல்லா உயிர்களுக்கும் தலைவனாக இருத்தல் பற்றி ஐயன் (48) என்ற சொல்லினாலும் புகழப் பெறுகிறான்.

## 2. முருகனின் தோற்றம்

ஒவ்வொரு நிலத்திலும் வாழ்ந்த மக்கள் அந்நிலத்தில் வழங்கும் கருப்பொருள்களுக்கு ஏற்பவும் உள்ளத்தில் மலரும் அழகுணர்ச்சிக்கு ஏற்பவும் தாம் வழிபட்ட இறைவனுக்கு வடிவமும் வாகனமும் ஆடை அணிகலனும் இன்ன பிறவும் அமைத்து நிறைவு பெற்றனர். அவ்வகையில் குறிஞ்சி நிலத்து மக்கள் முருகனின் எழில்மிகு தோற்றத்தை எவ்வகையில் புனைந்து போற்றி மகிழ்ந்தனர் என்பதைச் சங்கப் பாக்களில் காணப்படும் குறிப்புக்களினால் உணர முடிகிறது. குறிஞ்சி நிலத்தில் காணப்படும் விலங்குகளில் களிறு தோற்றத்தாலும் ஆற்றலாலும் மிகப் பெரிது. ஆதலின் மிகப் பெரியோனாகிய குறிஞ்சிக் கடவுள் முருகனுக்குக் களிற்றினை ஊர்தியாகக் கற்பித்தனர். ஒருவகையில் எவ்வகை விலங்கும் உயிரைக் குறிக்கும். அதனை அடக்கி, ஊர்ந்து ஒளிரும் இறைவன் உயிரினை ஆட்கொள்ளும் உண்மையினைக் குறிப்பால் உணர்கிறோம். மலை நிலத்தில் காணப்படும் பறவைகளில் அழகும் ஆற்றலும் மிக்கது மயில். நச்சரவையும் நடுங்கப் புடைக்கும் ஆற்றல் மயிலுக்கு உண்டு. ஆதலின், மயிலையும் முருகனுக்கு ஊர்தியாகப் பண்டையோர் கண்டனர். பின்வரும் சங்க இலக்கியத் தொடர்களில் யானையும் மயிலும் முருகனின் ஊர்தியாகக் குறிக்கப்படுதலைக் காண்கிறோம் : யானை -செங்கோட்டி யானை (49), அறுகோட்டு யானை (50), களிறும்பாடி (51), களிறூர்த் தாங்கு (52). மயில் -மஞ்ஞைக்கும் அரிது (53), மணிமயில் (54), பிணிமுக வூர்தி (55).

### கொடி

சிறு நிலப்பரப்பை ஆளும் அரசனுக்கு ஏனைய மக்களினின்றும் வேறுபிரித்துக் காட்டும் வகையில் கொடி, படை, ஆடை, அணிகலன் முதலியன அமைந்திருத்தல் போல, எல்லா அண்டங்களுக்கும் நாயகனாகிய இறைவனுக்கும் இத்தகைய அரச சின்னங்களை அமைத்து ஏனைய தேவர்களினின்றும் வேறுபடுத்தி அக்காலத்து ஆன்றோர் அகமகிழ்ந்தனர். வெற்றிக்கு அடையாளமாக விளங்குவது கொடி, மாலை முதலியனவாகும். முருகனுக்கு யானை, மயில், சேவல் ஆகியன மூன்றுமே கொடியாகக் கூறப்பெற்றுள்ளன. இவற்றுள் யானையும், மயிலும் அவனுடைய ஊர்திகள் ஆகும். சங்க இலக்கியக் குறிப்புகளில் மிகுதியாக மயில் கொடி சுட்டப்பெறுகிறது (56).

### மாலை

முருகனுக்கு உகந்ததாக வெண்கடம்ப மலர்மாலையினைச் சங்கப் பாக்கள் குறிக்கின்றன. கடம்ப மாலை அணிந்துள்ளதால் முருகனுக்குக் கடம்பன் என்ற பெயரும் உண்டு : கடம்பும் (57), கடம்பமர் (58), தேம்பாய் கண்ணி (59), நெடுவேள், மார்பின் ஆரம்போல (60), தொடலை யும் (61).

அகநானூற்றில், முருகன் மார்பில் அணிந்துள்ள வெண்கடம்ப மாலையைப் போலச் செக்கர் வானத்தில் கொக்கின் குழாம் பறந்து சென்றதாக அரிய கற்பனையை நக்கீரர் படைத்துள்ளார் (62).

### படைக்கருவி

முருகனின் படைக்கருவி வேல் ஆகும் என்பதை முன்னரே கண்டோம். குறிஞ்சிப் பாட்டில், இலங்கிலை எஃகின் (63) என்ற தொடரினாலும் வேல் குறிக்கப் பெற்றுள்ளது. முருகன் படைக்கருவியாக வில்லும் சுட்டப் பெற்றுள்ளது (64).

### முரசு

பகைவரை அழித்த வெற்றியை முழங்கும் இன்னிசை முரசும் முருகனுக்கு உண்டு. இதனைக் குறிஞ்சிப் பாட்டில் கபிலர் இயம்பி இருத்தலால் அறியலாம் (65).

### ஆடை

சிவந்த திருமேனியினை உடைய முருகனின் ஆடையும் செம்மை நிறமுடையதே. இதனை, *'செய்யன் சிவந்த ஆடையன்'* என்ற திருமுருகாற்றுப்படையின் (66) பகுதியாலும், *'உடையும் உலையலும் செம்மை'* என்ற பரிபாடல் (67) பகுதியாலும் அறியலாம். ஆயினும், கலித்தொகையில், *'வேல்வலா னுடைத்தாழ்ந்த விளங்குவெண் துகிலேய்ப்ப'* எனவரும் பாடலில் (68) வெண் துகில் சுட்டப்பெற்றுள்ளது. ஏனைய சங்க இலக்கியப் பகுதிகளை ஆழ்ந்து பயின்று உரை வரையும் ஆற்றல்மிக்க நச்சினார்க்கினியர், *'முருகன் தனக்குரித்தல்லாத வெண்டுகில் உடுத்தாற் போல'* என்று சிறப்புக் குறிப்பு வரைந்திருத்தல் சிந்திக்கத்தக்கது.

### அணிகள்

பேராண்மையின் சின்னங்களாகக் கருதப்பெறும் வீரக்கழலும், வெற்றித் தொடியும் முருகனுக்குரிய அணிகளாகச் சங்கப் பாக்களில் குறிக்கப் பெற்றுள்ளன : கழல் தொடி (69).

காதில் அணியும் தோடும் சிறந்த அணிகலனாகச் சுட்டப் பெறுகிறது : தோடும் (70).

பொதுநிலையில் பலவகையான அணிகளையும் முருகன் சூடியவன் என்பதை பைம்பூட் சேஎய் (71), சுடர்பூட் சேஎய் (72) என்னும் தொடர்களினால் அறிகிறோம்.

## 3. முருகனின் ஆற்றல்

இறைமைக் குணங்களில் சர்வ வல்லமையாகிய பேராற்றலும் ஒன்றுகும். இப்பேராற்றல் படைத்த பெரும் தெய்வமாக முருகனைச் சங்கப் புலவர்கள் போற்றியுள்ளனர் :

*' முருகன் அன்ன சீற்றத்துக் கடுந்திறல் '* (73)

*' முருகுறழப் பகைத்தல் '* (74)

*' முனைதிறை கொடுக்குந் துப்பிற் றன்மலைத் தெறல் அருமரபின் கடவுள் பேணி '* (75)

*' ஆண் தகை விறல் வேள் '* (76)

*' முருகுறழ் முன்பொடு '* (77)

*' வென்றி நெடுவேள் '* (78)

### சீற்றம்

ஆற்றல்மிக்க முருகனின் சீற்றம் விழுமிய உவமையாக விளம்பப் பெற்றுள்ள பகுதிகள் வருமாறு :

*' முருகன் அன்ன சீற்றத்துக் கடுந்திறல் '* (79)

*' முருகற் சீற்றத் துருகெழு குருசில் '* (80)

அஞ்சத்தக்க முருகனின் கடும் சினம் பின்வரும் பாடல்களில் குறிக்கப் பெற்றுள்ளது :

*' பேஎம் முதிர் கடவுள் '* (81)

*' கடுஞ்சின விறல்வேள் '* (82)

*' முருகுடன்று கறுத்த கலியழி மூதூர் '* (83)

*' சினைஇய வேலன் உண்டு '* (84)

### சூரனையும் ஏனைய அசுரர்களையும் அழித்தமை

நன்மையின் வடிவமாய்த திகழ்பவன் இறைவன். தீமையின் உருவம் அரக்கர். ஆதலின், அரக்கரை இறைவன் அழித்தான் என்று கூறப்பெறும் இடங்களில் எல்லாம் தீய சக்திகளை இறைவன் அழித்ததாகவே கொள்ளுதல் வேண்டும். சங்க இலக்கியங்களில் அசுர சக்திகளை அவுணர், ஒன்னுதார், கொடியோர், படியோர் என்ற சொற்கள் சுட்டுகின்றன. இக்கொடிய தீயோரை அழித்து, நல்லோரைக் காக்கும் முருகனின் மறக் கருணையைப் பின்வரும் சங்க இலக்கியப் பகுதிகள் குறிக்கின்றன:

*'செங்களம் படக்கொண் றவுணர்த் தேய்த்த*
*செங் கோலம்பிற் செங்கோட்டியானை'* ; (85)

*'படியோர்த் தேய்த்த பல்புகழ்த் தடக்கை*
*நெடுவேள் பேண'* ; (86)

'ஒன்னுதார்க் கடந்தடூஉம் உரவுநீர் மாகொன்ற
வென்வேலான்' ; (87)

அசுரர்களின் தலைவனைச் சூரன் குறிக்கப் பெறுகிறான். இக்கொடியோனை அழித்து, தேவர்களை விடுவித்த முருகனின் அருட்செயல் பல இடங்களில் சுட்டப் பெறுகின்றது:

' சூர்மருங் கறுத்த சுடரிலை நெடுவேல்
சினமிகு முருகன் தண்பரங் குன்றத்து
அந்துவன் பாடிய சந்துகெழு நெடுவரை ' 88

' ஈரணிக் கேற்ற ஓடியாப் படிவத்துச்
சூர்கொன்ற செவ்வேலார் பாடிப் பலநாளும்
ஆராக் கணைகாமங் குன்றத்து நின்னெடு
மாரி யிறுத்த கடவுளைக் கண்டாயோ ' 89

' சூர்நவை முருகன் சுற்றத் தன்னநின் ' 90

' சூருடை முழுமுத றடிந்த பேரிசைக்
கடுஞ்சின விறல்வேள் களிறூர்த் தாங்கு ' 91

' வெண்டிரைப் பரப்பிற் கருஞ் சூர்க் கொன்ற
பைம்பூட் சேஎய் ' 92

உயிர்களுக்கு நேரும் எல்லா வகையான துன்பங்களையும் போக்கி அருள்புரிந்து காப்பதுதான் முருகனின் தலைமைப் பண்பாகும். இச்சிறந்த இயல்பினைக் கலித்தொகையில்,

' உற்றுர் இடுக்கண் தவிர்ப்பான் '

என்ற இனிய தொடரினுல் கபிலர் பாடியுள்ளார். 93

## 4. வெறியாடல்

சங்க கால மக்களின் பழக்க வழக்கங்களில் வெறியாடலும் காணப்படுகிறது. வெறி என்ற சொல்லிற்கு மணம் என்ற பொருள் உண்டு. பெரும்பாலும் மணம் புரியும் நிலையிலுள்ள மங்கையின் உடல் வேறுபாட்டிற்குக் காரணம் அவளுற்ற காம நோய் என்பதை அறியாத தாயர் அவ்வேறுபாட்டின் காரணத்தை அறியும் பொருட்டு முதுபெண்டிராகிய கட்டுவிச்சியை அழைத்துக் குறி கேட்பது வழக்கம். இம்மூதாட்டி அனுபவம் மிக்கவள். இறைவனின் பல்வேறு பெயர்களை அகவி ஆலோசித்துக் குறி சொல்லும் காரணத்தால் இவளை 'அகவல் மகள்' என்றும் கூறுவர். முறத்தில் நெல்லை இட்டு எண்ணிப் பார்த்து, அதனுல் சில நிமித்தங்களை அறிந்து முடிவாக அப்பெண் முருகனுல் அணங்கப் பெற்றுள் என்று அறிவிப் பாள். அதுகேட்ட தாயர் பூசாரியாகிய வேலனை அழைத்து, முருகனுக்கு வெறியாட்டு எடுத்து அப்பெண்ணின் நோயினை நீக்க முற்படுவர். கழற்சிக்காயை வைத்து எண்ணிப் பார்த்துக் குறி சொல்லும் வழக்கமும் உண்டு. வெறியாடல் என்னும் வழிபாட்டு நிகழ்ச்சியில் பழங்கால மகளிரின் அச்சங் காரணமாகத் தோன்றிய பக்தி நிலையைக் காண்கின்றேம்.

### வெறியாடல் புரியும் மகளிர்

வெறியாடல் என்னும் வழிபாட்டினை முதுபெண்டிர் முன்னின்று நடத்துதல் உண்டு. முருகனுடைய ஆவேசம் வரப்பெற்ற இம்முதுபெண்டிர் முருகனுடைய சிறப்பையும் அவன் கோயில் கொண்டுள்ள மலையின் வளத்தையும் அகவிப் பாடுதல் உண்டு. மகளிர் வெறியாடிய நிகழ்ச்சிக்கு பின்வரும் சங்க இலக்கியப் பாடல்கள் சான்றுக உள்ளன :

‘ செவ்வேள் வெறியாடு மகளிரொடு செறிய ’ 94

‘ புனவன் துடவைப் பொன்போற் சிறுதினைக்
கடியுண் கடவுட் கிட்ட செழுங்குரல்
அறியா துண்ட மஞ்ஞை ஆடுமகள் ’ 95

## வேலன் வெறியாடுதல்

கட்டினுலும் கழங்கினுலும் குறிபார்த்து முதுபெண்டிர் கூறிய பின்னர், முருகனுல் இந்நோய் வந்ததென உணர்த்தப் பெற்ற தாயர் பூசாரியாகிய வேலனைக் கொண்டும் வெறியாடல் நிகழ்த்துதல் உண்டு. முருகன் வழிபாட்டினை நிகழ்த்தும் பூசாரி வேலன் என்று பல சங்கப் பாடல்களில் சுட்டப் பெறுகிறுன். முருகனுக்குரிய வேலினை இவன் கையில் ஏந்தி ஆவேசத்து டன் குறி கூறுவதால் வேலன் என்று வழங்கப் பெற்றிருத்தல் கூடும். முதுவாய் வேலன் 96, முதுவேலன் 97, எனச் சுட்டப்பெறுவதால், அனுபவத்தினுல் அறிவு வாய்க்கப் பெற்ற முதியவன் என்று உணரலாம். தலைவியின் மெய் வேறுபாட்டிற்குரிய உண்மைக் காரணத்தை அறியாது முருகனுல் இவ்வேறுபாடு வந்தது எனக் கருதும் நிலையில்தான் வேலன் விளங்குகிறுன். வேலன் வெறியாடிய நிலையினைப் பின்வரும் சங்க இலக்கியப் பாடல் பகுதிகள் புலப்படுத்துகின்றன :

‘ வெறியென உணர்ந்த வேலன் ’ 98

‘ முருகயர்ந்து வந்த முதுவாய் வேல ’ 99

‘ வேலற் றந்தா ளாயினவ் வேலன் ’ 100

‘ அறியா வேலன் வெறியெனக் கூறு ’ 101

‘ வேலற்கவ் வெறியே ’ 102

‘ முருகென மொழியும் வேலன் ’ 103

‘ முருகென வேலன் தருஉம்
பருவ மாகப் பயந்தன்றுல் நமக்கே ’ 104

‘ அருங்கடி வேலன் முருகொடு வளைஇ ’ 105

‘ வேலன் வேண்ட வெறிமனை வந்தோய் ’ 106

## வெறியாடும் இடம்

முருகனுக்காக வேலன் கொண்டாடும் வெறியாடல் நிகழ்ச்சி பெரும்பாலும் பூத்துக் குலுங்கும் புங்க மரத்தின் நிழலில், வெண்மணல் பரப்பி அமைக்கப்பெற்ற களத்தில் நடைபெற்றது. சிற்சில வேளைகளில் தலைவியின் வீட்டிலும் வீட்டிற்கு முன்பும் இத்தகைய நிகழ்ச்சிகள் நடந்ததாகக் காண்கின்றேம்.

‘ வெறிமனை வந்தோய் ’ 107

‘ எம்மணங் கினவே மகிழ்ந முன்றில்
நனைமுதிர் புன்கின் பூத்தாழ் வெண்மணல்
வேலன் புனைந்த வெறியயர் களந்தொறும் ’ 108

' வெறியயர் வியன்களம் ' 109

' கடியுடை வியனகர்க் காவல் ' 110

**படையல் முறை**

வெறியாட்டு எடுக்கும் வேலன் முருகனுக்கு நிகழ்த்தும் படையல் முறையினையும் சங்க இலக்கியக் குறிப்புக்களினுல் அறிகின்ருேம். முருகனுக்கு விருப்பமான கடம்ப மாலை, அரலை மாலை, குறிஞ்சி மலர் முதலியவற்றைச் சூட்டுகிருன்.

' விரவுப்பூம் பலியொடு விரைஇ ' 111

' கடம்புகொடி யாத்துக் கண்ணிசூட்டி ' 112

' அரிக்கூ டின்னியங் கறங்கநேர் நிறுத்துக்
கார்மலர்க் குறிஞ்சி சூடிக் கடம்பின் ' 113

குறிஞ்சி நிலத்தில் சிறப்பாக விளையும் தினை அரிசியுடன் ஆட்டினையும் பலிப்பொருளாக வைத்து மணியடித்துப் பலவகையான வாத்தியங்களையும் முழங்கிப் பூச்சொரிந்து பக்தி உணர்ச்சி மிக ஆவேசத்துடன் வேலன் வெறியாட்டினை நிகழ்த்துகிருன்.

' புனவன் துடவைப் பொன்போற் சிறுதினைக்
கடியுண் கடவுட் கிட்ட செழுங்குரல்
அறியா துண்ட மஞ்ஞை ஆடுமகள் ' 114

' மறிக்குர லறுத்துத் தினைப்பிரப் பிரீஇச்
செல்லாற்றுக் கவலைப் பல்லியங் கறங்க ' 115

' பல்வே றுருவிற் சில்லவிழ் மடையொடு
சிறுமறி கொன்றிவன் நறுநுதல் நீவி
வணங்கினை கொடுத்தி யாயின் ' 116

' சிறுகுளகு அருந்து தாய்முலை பெருஅ
மறிகொலைப் படுத்தல் வேண்டி வெறிபுரி
ஏதில் வேலன் கோதை துயல்வரத்
தூங்கும் ஆயின் அதூஉம் நாணுவல் ' 117

தமிழ் மக்கள் தாம் வழிபட்டு வந்த தெய்வங்கட்குக் கலைக்கோயில் அமைத்துச் சிறப்போடு பூசனை ஆற்றி, இறையருளால் நலமும் வளமும் பெற்று வாழ்ந்து வந்தனர். முருகன் குறிஞ்சித் தெய்வம் ஆதலின், மிகப் பழைய முருகன் கோயில்கள் மலை உச்சியில் அமைக்கப் பெற்றன. மேலான இறைவனை மேலான இடத்தில் எழுந்தருளச் செய்து வழிபட்டுவரும் தமிழ் உள்ளத்தின் மேலான பக்தி உணர்வு குறிப்பிடத்தக்கது.

' தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது '

என்ற வள்ளுவர் வாக்கிற்கேற்ப, முருகனை அனுதினமும் வணங்கி அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நால்வகைப் பயனைப் பெறலாம்.

# மேற்கோள் குறிப்புகள்


1. அடைக்கலசாமி, எம். ஆர். தமிழ் இலக்கிய வரலாறு, பக்கம் 15
2. Basham, A. L. The Wonder That Was India, p. 330
3. Purnalingam Pillai, M. S. Tamil Literature, Introduction, p. 2
4. Clothey, W. Fred. The Many Faces of Murukan, p. 2
5. ஜகந்நாதன், கி. வா. பெரும் பெயர் முருகன், பக்கம் 2.
6. குறுந்தொகை, 362 : 1
7. ஐங்குறுநூறு, 245
8. ஐங்குறுநூறு, 249
9. ஐங்குறுநூறு, 308
10. அகநானூறு, 1: 3-4
11. அகநானூறு, 28 : 6
12. அகநானூறு, 118 : 5
13. அகநானூறு, 138 : 10
14. அகநானூறு, 181 : 6
15. அகநானூறு, 232 : 14
16. புறநானூறு, 16 : 12; பொருநராற்றுப்படை, 131
17. புறம், 56 : 14
18. புறம். 299 : 6
19. பதிற்றுப்பத்து, 26 : 12
20. மதுரைக்காஞ்சி, 181
21. மதுரைக்காஞ்சி, 724
22. நற்றிணை, 47 : 10
23. நற்றிணை, 82 : 4
24. தொல்காப்பியம், பொருள். அகத். 5
25. குறுந். 1 : 3
26. ஐங். 242
27. பெரும்பாணாற்றுப்படை, 458
28. குறிஞ்சிப்பாட்டு, 51
29. அகம். 266; பரிபாடல், 21 : 53
30. பட்டினப்பாலை, 154
31. அகம். 22 : 6, 120 : 1; புறம். 55 : 19
32. ஐங். 250; பதிற்று. 11 : 6
33. ஐங். 257
34. ஐங். 246
35. ஐங். 249
36. கலித்தொகை, 43 : 6
37. ஐங். 259
38. கலித்தொகை, 39 : 17
39. ஐங். 241, 248
40. கலித்தொகை, 104 : 14
41. கலித்தொகை, 27 : 16
42. கலித்தொகை, 81 : 9
43. கலித்தொகை, 52 : 10
44. அகம். 266 : 21 - 22
45. ஐங். 182
46. அகம். 149 : 16
47. ஐங். 244
48. கலித்தொகை, 43 : 5
49. குறுந்தொகை, 1 : 2
50. அகம். 1 : 4
51. அகம். 138 : 11
52. பதிற்று. 11 : 6
53. ஐங். 299
54. புறம். 56 : 7
55. புறம் 56 : 8
56. அகம். 149 : 14-6; பரிபாடல், 17 : 48; திருமுருகாற்றுப்படை, 122
57. அகம். 138 : 11

58. பெரும். 75
59. அகம். 28 : 6
60. அகம். 120 : 1
61. அகம். 138 : 12
62. அகம். 120
63. குறிஞ்சி. 52
64. பரி. 5 : 65
65. குறிஞ்சி. 51
66. முருகு. 206 - 7
67. பரி. 19 : 97 - 8
68. கலித்தொகை, 105 : 17
69. குறுந்தொகை, 1 : 3
70. அகம். 138 : 12
71. பெரும். 458
72. குறிஞ்சி. 61
73. அகம். 158 : 16
74. மதுரை. 181
75. அகம். 13 : 2 - 3
76. ஐங். 250
77. அகம். 181 : 6
78. குறுந்தொகை, 111 : 2
79. அகம். 158 : 16
80. புறம். 16 : 12; பொரு. 131
81. குறுந்தொகை, 87 : 1
82. பதிற்று. 11 : 6
83. பதிற்று. 26 : 12
84. ஐங். 248
85. குறுந்தொகை, 1 : 1 - 2
86. அகம். 22 : 5 - 6
87. கலித்தொகை, 27 : 15 - 16
88. அகம். 59 : 10 - 13
89. கலித்தொகை, 93 : 25 - 28
90. புறம். 23 : 4
91. பதிற்று. 11 : 5 - 6
92. பெரும். 457 - 458
93. கலித்தொகை, 40 : 13 - 14
94. பட்டி. 154 - 155
95. குறுந்தொகை, 105 : 1 - 3
96. அகம். 388 : 19
97. ஐங். 245
98. குறுந்தொகை, 360 : 1
99. குறுந்தொகை, 362 : 1
100. ஐங். 241
101. ஐங். 242
102. ஐங். 244
103. ஐங். 249
104. அகம். 232 : 14 - 15
105. மதுரை. 611
106. நற். 9
107. நற். 34 : 9
108. குறுந்தொகை, 53 : 1 - 3
109. அகம். 182 : 17
110. அகம். 232 : 13
111. அகம். 232 : 12
112. அகம். 382 : 3
113. மதுரை. 612 - 613
114. குறுந்தொகை, 105 : 1 - 3
115. குறுந்தொகை, 263 : 1 - 2
116. குறுந்தொகை, 362 : 3 - 5
117. அகம். 292 : 3 - 6